செய்தி வெளியீடு எண்: 873 நாள்: 07.10.2010.

பத்திரிக்கைச் செய்தி

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது, அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின், சென்னை 16 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் அக்டோபர் 2010 மாதத்திற்கான மக்கள் குறைதீர் கூட்டம் 9.10.2010 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல் படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையாளருக்காக

| வ.எண் | மண்டலங்களின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்களின் முகவரி |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் மண்டலம் | சென்னை நடுநலைப்பள்ளி,<br>எண் 16 சாலை விநாயகர் கோவில் தெரு, சென்னை 1<br>(பாரதி மகளிர் கலை கல்லூரி எதிரில்) |
| 2 | இராயபுரம் மண்டலம் | சென்னை உயர்நிலைப்பள்ளி<br>எண் 2 மணிகண்டன் 8வது தெரு,<br>சிமென்ட்ரி ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை,<br>சென்னை 21 |
| 3 | பெரம்பூர் மண்டலம் | அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி<br>3வது மெயின் ரோடு (கிழக்கு)<br>மகாகவி பாரதி நகர், வியாசர்பாடி, சென்னை 39 |
| 4 | அண்ணாநகர் மண்டலம் | கோட்டம் 57<br>சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி<br>பாலவாயல் தெரு,அயன்புரம் மார்க்கெட், ஜாயின்ட் ஆபீஸ் அருகில் ,சென்னை 23 |
| 5 | அம்பத்தூர் மண்டலம் | பக்தவச்சலம் வித்யாஸ்வ்ரம்,<br>31வது தெரு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,<br>கொரட்டூர், சென்னை 80 |
| 6 | வில்லிவாக்கம் மண்டலம் | சென்னை தொடக்கப்பள்ளி,<br>எண் 21 என்.எஸ்.கே நகர் மெயின் ரோடு, சென்னை 106 |
| 7 | திருவொற்றியூர் மண்டலம் | கத்திவாக்கம் ஆண்கள் நகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>(கத்திவாக்கம் ரெயில் நிலையம் பின்புறம்)<br>எண்ணூர், சென்னை 57 |
| 8 | ஆவடி மண்டலம் | வில்லிவாக்கம் ஒன்றியம் பாண்டேஸ்வரம் ஊராட்சி<br>பாண்டேஸ்வரம் பஞ்சாயத்து அலுவலகம், சென்னை 55 |
| 9 | தி.நகர் மண்டலம் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, அம்மன் கோயில் தெரு, வடபழனி, சென்னை 26 |
| 10 | மயிலாப்பூர் மண்டலம் | சென்னை ஆண்கள் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>காந்தி கிராமம், லட்சுமிபுரம், புதிய கடற்கரை சாலை,<br>திருவான்மியூர், சென்னை 41 |
| 11 | பரங்கிமலை மண்டலம் | எஸ் வி எஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி,<br>நேருநகர், குரோம்பேட்டை, சென்னை 44 |
| 12 | தாம்பரம் மண்டலம் | முடிச்சூர் ஊராட்சி மன்ற அலுவலகம், முடிச்சூர் |
| 13 | சைதாப்பேட்டை மண்டலம் | சென்னை நகராட்சி மேல்நிலைப்பள்ளி, ஐந்து பர்லாங் ரோடு, மடுவன்கரை, கிண்டி, சென்னை 32 |
| 14 | ஆயிரம்விளக்கு மண்டலம் | சென்னைஆண்கள் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>ஸ்ட்ராஉறன்ஸ் ரோடு, பட்டாளம், சென்னை 12 |
| 15 | சேப்பாக்கம் மண்டலம் | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, 51 பங்காரு நாயக்கன் தெரு, சென்னை 2 |
| 16 | சோழிங்கநல்லூர் மண்டலம் | தந்தை பெரியார் மேல்நிலைப்பள்ளி, கலைமகள் தெரு,<br>புழுதிவாக்கம், சென்னை 91 |

ஆணையாளருக்காக

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9